# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 21 | 04 - 05 - 2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 75



...குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசா நகையகம்

(சி-7834)

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா


# புலிகள் விடுத்த அழைப்பை ஏற்று அவர்களின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கவுள்ளேன்

## யப்பான் சிறப்புத் தூதுவர் யசுகி அகாஷி

(லண்டன்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க வருமாறு எனக்கு அழைப்பு வந்துள்ளது. இந்த அழைப்பை ஏற்று தலைவர் பிரபாகரனை நான் சந்திக்க இருக்கிறேன் என யப்பானின் சிறப்புத் தூதுவர் யசுகி அகாஷி பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தலைவர் பிரபாகரனுடனான பேச்சுக்கள் வெளிப்படையாக நட்புரீதியிலாக அமையும் என்றே நான் நம்புகிறேன்.

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அனுப்பிய கடிதம் அதற்கு பிரதமர் ரணிலின் பதில் கடிதம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள விடயங்கள் பற்றி நான் எனது கருத்துக்களை இந்த சந்திப்பின்போது தலைவர் பிரபாகரனிடம் கூற இருக்கிறேன்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் நாளை வன்னி வருகிறார்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வன்னி வருவுள்ளார். லண்டனில் இருந்து இன்று புறப்படும் இவர் நாளை கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி வரவுள்ளார். இவருடன் துணைவியார் அடேல் பாலசிங்கமும் வன்னி வருகிறார். அரசியல் ஆலோசகர் தமிழீழத் தேசியத் தலைவருடன் சிறிலங்க பிரதமரின் கடிதம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. உதவி வெளிநாட்டமைச்சர் சிறிலங்காவுக்கு வருகின்றார்

(கொழும்பு)

அமெரிக்காவின் உதவி வெளிநாட்டமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா இம்மாதம் சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அழைப்பை ஏற்று இம்மாதம் 12ஆம், 13ஆம்திகதிகளில் இவர் கொழும்பிற்கு வரவுள்ளார் என்று கொழும்பிலுள்ள, அமெரிக்கத் தூதரகம் கூறியுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய யூனியன் பாராளுமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வனுடன் இருமணி நேரம் பேச்சு

### தற்போதைய அரசியற் சூழ்நிலை குறித்து ஆராய்வு

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை ஐரோப்பிய யூனியன் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் குஜ்தோன்கான் ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மெலோன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர். இச்சந்திப்பு நேற்றுப் முற்பகல் 10.45 மணி தொடக்கம் மதியம் 12.50 மணிவரை கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் சமாதான பேச்சு வார்த்தைகள் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ள விடயங்களைத் தற்பொழுது வெளியிடமுடியாது என ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



## 19 வருடங்களின் பின்னர் தென்னைமரவாடி கிராமத்துக்கு மக்கள் குழுவினர் சென்றனர்

திருகோணமலையில் உள்ள தென்னைமரவாடி கிராமத்துக்கு சுமார் 19 ஆண்டுகளின் பின்னர் அக்கிராம மக்கள் அடங்கிய குழுவினர் நேற்றுச் சென்றுள்ளனர்.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி இக்கிராமமக்கள் பலவந்தமாக சிறிலங்காப்படையினரால் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்களும், திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் மற்றும் ஊடகவியலாளர்களும், இவ்வாறு தென்னைமரவாடி கிராமத்துக்குச் சென்று திரும்பியுள்ளனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)



வன்னிக்கு வருகைதந்த உலமாக்கள்

## காத்தன்குடி உலமாக்கள் புலிகளின் பிரதிநிதிகள் சந்திப்பு

### பயனுள்ள சந்திப்பென உலமாக்கள் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

காத்தான் குடியில் இருந்து வந்த உலமாக்கள் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தி உள்ளனர். இச்சந்திப்பில் அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் மற்றும் நியூட்டன்.ஆகியோர் ஐ.எல்.எம் முஸ்தபா தலைமையிலான இருபதுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளுடன் கலந்துயையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சமாதான சூழலைத் தொடர்ந்து முன்னெடுப்பது என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்புப் பற்றி காத்தான்குடி உலமாக்கள் சபையின் தலைவர் எம்.எச்.எம்.புகாரி கூறுகையில் இச்சந்திப்பு மிகவும் திருப்தியாக அமைந்திருந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - கண்காணிப்புக் குழு இடையான நேற்றைய சந்திப்பில் இணக்கப்பாடு எதுவுமில்லை!

### இரண்டரை மணிநேரம் நடந்த சந்திப்பு

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரிலெவ்சன் தலைமையிலான குழுவினருக்கும் இடையே நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பு எதுவித முடிவுகளும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்துள்ளது.

சுமார் இரண்டரை மணிநேரம் இடம் பெற்ற இச்சந்திப்பின் போது கடல் விவகாரம் சம்பந்தமாகவும், உயர் பாதுகாப்பு வலயம் குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். யாழ்ப்பாண உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள இராணுவ முகாம்கள் குறித்தும் நேரடியாக கண்காணிப்புக் குழுத்தலைவர் அவர்களுக்கு நேற்றைய சந்திப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள் விளக்கியுள்ளார். கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று பிற்பகல் 2.40 மணி முதல் 5.10 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் சமாதான செயலகத்

(08ஆம் பக்கம் பார்க்க)



## ரணிலை சந்திப்பார்

(கொழும்பு)

யப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி இன்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். புதுடில்லியில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய யசுகி அகாஷி நேற்று சிறிலங்காவுக்கு வந்தார்.

இவர் நாளை காலை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேசவுள்ளார்.

மேலும் இவர் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரைச சந்தித்துப் பேசவுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

நாகநாதி சின்னத்து (மாமுனை) என்பவருடைய காதுக்கேண் (இயக்கோண்) 30.04.2003 அன்று தண்ணீரூற்றுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் முள்ளியவளை அல்லது புதுக்குடியிருப்பு காவல் பணிமனையில் அல்லது புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3207)

## ஆலயங்கள் புனரமைப்பு

(வடமராட்சி கிழக்கு )

வடமராட்சிகிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் இராணு நடவடிக்கை மூலம் முற்றாகச் சேதமடைந்த இந்து ஆலயங்கள் புனர்நிர்மானம் செய்யப்படுவதுடன் செயலிழந்து போயுள்ள ஆலய பரிபாலன சபைத் தெரிவுகள் இடம்பெற்றுவருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. (11)

## குடிநீர் விநியோகத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்கக்கோரல்

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் குடிநீர் பெறுவதில் மக்கள் சிரமப்படுகின்றனர் கட்சன் வீதிப் பகுதியில் 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குளாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு 25கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குழாய்கள் பொருத்தப்பட்டு நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் அந்தந்த வீடுகளுக்கு நீர் வழங்கப்பட்டது. அத்தோடு பயிர்ச் செய்கைக்கான நீர் வழங்கும் திட்டத்திற்கு வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு நீர் வழங்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

நீர் இறைக்கும் இயந்திரம் குழாய்கள் என்பன 1996ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன் பழுதடைந்து விட்டது. தற்போது அப்பகுதி மக்கள் அனைவரும் குழாய்க்கிணறு அமைத்துள்ள இடத்திற்கு வந்து அந்த ஓரிடத்திலிருந்தே குடிநீரைப் பெறுகின்றனர். அப்போது அக் குழாய்க் கிணறுகள் புனரமைப்பதற்கென பல நிறுவனங்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டும் இதுவரை எந்த புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவே அப்பகுதி மக்கள் முன்னைய நிலைக்கு புனரமைப்பு வேலைகள் மேற்கொள்வார்கள் என எதிர்பார்த்துள்ளார்கள்.

அத்துடன் பல பகுதிகளில் பல பொதுக்கிணறுகள் கடந்த காலங்களில் அமைக்கப்பட்டிருந்தன. வீதியோரங்களில் அமைக்கப்பட்ட பல கிணறுகள் சேதமடைந்து கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெருமளவு வெடி பொருட்கள் மீட்பு

வடமராட்சி கிழக்கில் உள்ள வெத்திராயன், வேம்படி, உடுத்துறை ஆகிய பகுதிகளில் கடந்த புதன், வியாழக்கிழமைகளில் மனிதநேய விசேட தகர்ப்பு அணியினரால் ஒரு தொகுதி வெடிபொருட்கள் எடுக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமையன்று வத்திராயன் பகுதியில் எடுக்கப்பட்ட வெடிபொருட்கள், 40 எம்.எம் குண்டு(இது அழிக்கப் பட்டது), 60 எம்.எம்.செல்-45, ஆர்.பி.ஜி செல்-09, ரொக்கற் செல்-08, 82 எம்.எம் செல்-30, கைக்குண்டு-02, 81 எம்.எம் பரா-03.

வியாழக்கிழமை அன்று உடுத்துறை மற்றும் வேம்படி ஆகிய இரு இடங்களிலும் எடுக்கப்பட்ட வெடிபொருட்கள்.152.எம்.எம் செல்-01, 122 எம்.எம்.பரா-03, 82.எம்.எம் பரா-01, ஆர்.பி.ஜி-செல்-10, 82 எம்.எம் செல்-21.81 எம்.எம் செல்-06, 60.எம்.எம்-செல்12, ரொக்கற்-02, பியூஸ்-06 என்பனவே எடுக்கப்பட்டுள்ளன. (11)

## கூட்டுறவுச்சங்கக்கிளை இல்லை 400 குடும்பங்கள் பாதிப்பு

வடமராட்சி கிழக்கு கோயில் வயல், சங்கத்தார் வயல் , இயக்கச்சி, ஊறணிப்பற்று ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவுகளிலும் 400க்கும் மேற்பட்ட மக்கள் மீளக் குடியமர்ந்தும் இதுவரை கூட்டுறவுச் சங்கக்கிளை ஏதும் திறக்கப்படவில்லை.

இப்பிரதேசங்கள் பச்சிலைப் பள்ளி ப.நோ.கூ சங்கத்தின் எல்லைக்குட்பட்டவை. இப்பகுதியில் உள்ள கூட்டுறவுக் கிளைகள் 1991,1992 ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்தன.

எனினும் மக்கள் மீளக் குடியமர்ந்தும் இதுவரை ஒருகிளை கூட திறக்கப்படவில்லை. இதனால் இப்பகுதியில் உள்ள மக்கள் ஆறு மைல்கள் தூரம் சென்று பளை நகர்ப்பகுதியில் உள்ள கிளையில் தமது நிவாரணப் பொருட்களை பெற்றுச்செல்கின்றார்கள். (11)

— கோட்டைப் பகுதியில் முகாம் அமைப்பது —

# இயல்பு வாழ்வுக்குத் திரும்பும் மக்களின் அபிலாசைகளைப் புறந்தள்ளுவதாகும்

### கண்காணிப்புக்குழுவுக்கு தீவக மக்கள் நலன்காப்பகம் கடிதம்

(அலுவலக செய்தியாளர்)

512 படையணி யாழ். கோட்டைப் பகுதியில் படை முகாம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன இச் செயற்பாடு இயல்பு வாழ்கைக்கு திரும்பும் மக்களது அபிலாசைகளை முற்றாக புறந்தள்ளுவதாக உள்ளது எனவே இது சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இது குறித்து தீவக மக்கள் நலன் காப்பகம் கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்கிறது என அவ்வமைப்பு கண்காணிப்புக் குழுவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர அமைதி, சமாதானம், சக வாழ்வு தோன்றி நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும் என எண்ணி இருந்த மக்களுக்கு இட் புதிய படைமுகாம் அமைப்பு பேரிடியாக அமைந்துள்ளது. புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முற்றிலும் விரோதமாக அரசு தன்னிச்சையாக அமைச்சரவைத் தீர்மானம் எடுத்து யாழ். கோட்டைப்பகுதியில் புதிய இராணுவ முகாம் அமைக்கும் பொறுப்பை இராணுவத்திடம் கையளித்துள்ளது.

இப்புதிய இராணுவ முகாம் அருகிற்தான் தீவுப்பகுதிகளுக்கான ஒரே தரைவழிப்பாதை அமைந்துள்ளது. இப்புதிய முகாமினால் தீவக மக்களின் போக்குவரத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தீவக மக்கள் தமது உற்பத்திகளை அதாவது விவசாயம், மீன்படி, சிறு தொழில் போன்றவற்றின் மூலம் பெறும் உற்பத்திகளை சந்தைப் படுத்த இம் முகாம் பெரும் நடையாக விளங்கும் தீவக மக்கள் தமது நுகர்வுத் தேவைகளை பூர்த்தி செய்யவும். அரச திணைக் களங்களில் தமது அலுவல்களை மேற்கொள்ளவும் யாழ். .நகரின் மையப்பகுதிக்கு செல்வதற்கு இப்படை முகாம் பெரும் அச்சுறுத்தலாகவே அமையும்.

அதே போன்று எமது மக்கள் தமது அலுவல்களை நிறைவேற்றும் அரச அலுவலகங்கள், பொது நூலகம் போன்றவை அரச படைகள் நிலை கொள்ளும் இராணுவ முகாம்களை அண்டியே உள்ளன என்பதையும் தங்கள் கவனத்தில் கொள்ளவும்.

இப் படைமுகாம் அமைவது எமது மக்களை உளவியல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தி எதிர்பார்க்கப் படும் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் ஆதலால் புரிந்துணர்வு உடன்பாட்டில் கூறப்பட்ட அரசியல் தீர்வு காண்பதற்காக மக்கள் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தி நல்லிணக்க சூழலை ஏற்படுத்துவதற்கு யாழ்.கோட்டை பகுதியில் புதிதாக அமைய உள்ள இராணுவ முகாம் நெருக்கடிகளை தோற்றுவிக்கும் என்பதால் இராணுவமுகாம் அமைப்பதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு அன்புடன் கூறிக் கொள்கிறோம். என தீவக மக்கள் நலன் காப்பகம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (லோ)


## மரண அறிவித்தல்

**உயர்திரு வைத்திய கலாநிதி**

**எஸ். சிறி ராஜசேகரம்**

**(M.B.B.S (Cey) D.T.M & H)**

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற சுகாதாரப்பிராந்திய அதிகாரியும். மானிப்பாய் கிறீன் மெமோறியல் யாழ்/கிளி வில்லியம் ஹாவே, துணுக்காய். **Dr.** பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றில் கடமைபுரிந்தவரும், ஒளியரசன் வைத்தியசாலையை நடாத்திவருபவரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க நடமாடும் வைத்திய சேவையில் பணியாற்றுபவருமாகிய வைத்திய கலாநிதி உயர்திரு சுப்பிரமணியம் சிறி ராஜசேகரம் (எம்.பி.பி.எஸ் (இலங்கை) டி.ரி.எம் அன்ட் எச்) அவர்கள் 02.05.2003 அன்று காலாமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற தபாலதிபர் திரு.சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதிகளின் இளைய புத்திரனும் காலம் சென்ற அரியரத்தினம் (தபால் அதிபர்) தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயசோதியின் அன்புக்கணவரும், திருமதி கேமகோசினி கோகுலராஜா (கிளி.கனகபுரம் ம.வி) பத்மராஜ் (கனடா), மோகன்ராஜ்(கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் காலஞ் சென்ற திரு கோகுலராஜா (மின் இணைப்பாளர், இலங்கை சீமெந்து) உருத்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தி. சிறிராஜசிங்கம், திருமதி அரியசுகிர்தமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற திரு.ஆதிசர்வராஜா (புகையிரத இயக்குனர் திணைக்களம்) திருமதி பரமேஸ்வரி, திரு சண்முகநாதன் (மருந்தாளர் நீர்கொழும்பு வைத்தியசாலை) திரு கருணாகரன் (நிர்வாக அதிகாரி இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்), திருமதி ஜீவமலர், காலஞ்சென்ற சரோஜினி ஆகியோரின் மைத்துனரும். உசா, லதா, திருமதி அருள்வேந்தன், மகேந்திரராஜன், காலஞ் சென்ற சிவலோகநாதன் ஆகியோரின் தாய்மாமனும்,கௌசி, போஜன், ஜஸ்வில், கரி, போகன்,மது, தீபா,தர்சி,லக்சி,கிரி,விஜி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

**திருமதி கோகுல ராஜா**
(மகள்)

**இல-11, கனகபுரம்,**
**கிளிநொச்சி.**

(3185)



திருமகள் வணிபம் திருமகள் வணிபம் திருமகள் வணிபம் திருமகள் வணிபம் திருமகள் வணிபம்




## மங்கள கரமான திறப்பு விழா

நிகழும் மங்கள கரமான சுபானு வருடம் சித்திரை மாதம் 21ஆம் நாள் (04~05~2003) ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 10.54 மணிமுதல் 12.50 மணி வரை வரும் சுபவேளையில் **திருமகள் பல்பொறி உதிரிகள் வாணிபம்** யாழ். சாலை கிளிநொச்சியில் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்பெறவுள்ளது. அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு/திருமதி சுந்தரலிங்கம்.



## திருமகள் பல்பொறி உதிரிகள் வாணிபம்

113, யாழ். சாலை, கிளிநொச்சி.

(சி-8102)

திருமகள் வணிபம் திருமகள் வணிபம் திருமகள் வணிபம் திருமகள் வணிபம் திருமகள் வணிபம்

# இந்தியா – பங்களாதேஷ் உறவில் மேம்பாடு; எல்லையில் இணைந்து பணிபுரிய ஒப்பந்தம்!

**இந்தியா - பங்களாதேஷ் நாடுகளிடையே உறவைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அண்மைக் காலமாக இரு நாடுகளிடையேயான உறவு பாதிப்புக்குள்ளாகியிருந்த நிலையில் எல்லையில் இணைந்து பணியாற்றவகை செய்யும் ஒப்பந்தமொன்றில் இரு நாடுகளின் எல்லைப்பாதுகாப்பு படை அதிகாரிகள் கைச்சாத்திட்டுள்ளனர்.**

தங்களது படைகளுக்கிடையேயான மோதலைத் தவிர்க்க இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெற்று வரும் கடந்தகால சம்பவங்களைத் தடுத்து நிறுத்தவும், இரண்டு தரப்பினரின் படையினரும் கூட்டாக எல்லைக் கண்காணிப்பில் ஈடுபடவும் இவ்வொப்பந்தம் வழிவகுக்கின்றது.

இரண்டு நாடுகளின் எல்லைப்படையினருக்குமிடையே 2001ஆம் ஆண்டு நடைபெற்ற மோதலும் அண்மையில் இந்தியாவில் வாழ்ந்த பங்களாதேஷ் மக்களை இந்தியப் படையினர் பங்களாதேஷிற்குள் திருப்பி அனுப்பியமை இரண்டு நாட்டு உறவுகளைக் கடுமையாக பாதித்திருந்தன.

தற்போது எட்டப்பட்டுள்ள இவ் ஒப்பந்தம் இந்தியா-பங்களாதேஷ் உறவை வலுப்படுத்தும் என இரு தரப்பு எல்லைப் படையினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## வெளியேற முடிவு

சீனாவில் கல்வி பயிலகின்ற இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வியட்னாம் மாணவர்கள் வெகுவிரைவில் சீனாவை விட்டு வெளியேறவுள்ளனர். சார்ஸ் நோயின் தாக்கத்தையடுத்தே இந்த நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.



பாக்தாத்தில் ஈராக்கியர் இருவரால் எரிபொருள் தீர்ந்த நிலையில் உருட்டிச் செல்லப்படும் மோட்டார் சைக்கிளை அமெரிக்க கவச வாகனம் பின் தொடர்கிறது.

# பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க தூதரகம் மீது அல்கொய்தா தாக்குதல் நடத்தத் திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்கா மீது செப்டெம்பர் 11 தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படும் அல்கொய்தா இயக்கம் தற்போது பாகிஸ்தானிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது விமான தற்கொலைத் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிய சிறகுகள் பொருத்தப்பட்ட விமானமொன்றில் அல்லது ஹெலிகொப்டர் ஒன்றில் வெடிபொருட்களை ஏற்றிச் சென்று கராச்சியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது மோதுவதற்கு அல்கொய்தாவினர் திட்டமிட்டு வருகிறார்கள் என சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கைகளை அவதானித்து விமானிகளுக்கும், விமான நிலையங்களுக்கும் அறிவிப்பதற்கான ஆலோசனைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

# ஈராக்கிலுள்ள ஆயுதங்களை எம்மிடம் தாருங்கள்!

## - கொலம்பிய அரசு வேண்டுகோள்

ஈராக்கில் இனிமேல் பயன்படுத்த தேவையில்லாமலிருக்கும் நவீன ஆயுதங்களை கொலம்பியாவிற்கு விநியோகிக்குமாறு கொலம்பியாவின் சனாதிபதி அமெரிக்காவிடம் கூறியுள்ளார்.

கொலம்பியாவில் விமான வேவு நடவடிக்கைகளுக்கும், பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தத்திற்கும் பயன்படுத்துவதற்கென தமக்கு நவீன ஆயுதங்கள் தேவைப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

கொலம்பிய நாட்டில் மூன்று கெரில்லா குழுக்கள் 40 வருடகாலமாக அரசுடன் யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



வட ஈராக்கில் எரிபொருள் கம்பனி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதை அவதானிக்கும் அமெரிக்க இராணுவ வீரர்



தேசிய வழிபாட்டு நிகழ்வின் பின் வெள்ளை மாளிகையில் அறையொன்றில் இருந்து வெளியேறும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்

# ஈராக்கை மூன்று பிரிவுகளாக்கி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்குத் திட்டம்!

## -சில நாடுகள் ஆதரவளிக்க முன்வருகை

ஈராக்கில் அரசாங்கமொன்றை ஏற்படுத்தும் படியும், புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஈராக்கிய பிரமுகர்கள் விடுத்த வேண்டுகையைத் தொடர்ந்து அமெரிக்கா இவை சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உத்தேச திட்டத்தின் கீழ் ஈராக் 03 பிரிவுகளாக பிரிக்கப்படவுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், போலந்து ஆகிய நாடுகளின் இராணுவ வீரர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் உட்பட பலதரப்பட்ட கடமைகளில் ஈடுபடவுள்ளனர். இந்நாடுகளுடன் இத்தாலி, ஸ்பெயின், டென்மார்க், பல்கேரியா, நெதர்லாந்து, அல்பேனியா ஆகிய நாடுகளும் இராணுவ வீரர்களை அனுப்பிவைக்க முன் வந்துள்ளன.

எவ் அடிப்படையில் ஈராக் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படும் என்பது பற்றி எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. அங்கு ஏற்படுத்தப்படவுள்ள சிவில் நிர்வாகத்தின் தலைவராக முன்னாள் ராஜதந்திரியான போல பிறேமரை புஷ் நிர்வாகம் தெரிவுசெய்துள்ளது.

இதனிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற தொழுகையின் போது உரை யாற்றிய இஸ்லாமிய மதத் தலைவர்கள் இயன்றளவில் அரசாங்கம் ஒன்றை அமைக்கு மாறு கேட்டுள்ளனர்.



உலக உணவு நிறுவனத்தால் வழங்கப்பட்ட 7.5 மில்.டொலர் பெறுமதியான அரிசி இறக்கப்படும் உம்காஸார் துறைமுகத்தில் பாதுகாப்புப்பணியில் ஈடுபடும் அமெரிக்க கப்பலான "ரொபர்ட் ஷோ"

## வெள்ளத்தால் 16 பேர் பலி!

ஆஜென்டினாவில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக 16 பேர் இறந்துள்ளனர்.

ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் வீடுகளை இழந் துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.


அந்த நாட்டின் 30 லட்சம் ஹெக்டெயர் அளவுடைய மத்திய விவசாய மாகாணம் பல மீற்றர் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் இதனால் பெரும் பொருளாதார நெருக்கடியொன்றுக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.



ஜப்பானிய பிரதமர் யுனிசிரோ கொய்சுமி எதேன்ஸ் நகரில் தேவாலயம் ஒன்றின் முன்பாக நிற்கின்றார்.



# விளையாட்டின் ஆரம்பமும்




ஒரு நாட்டின் முக்கிய துறைகளில் விளையாட்டுத்துறை என்பது முதன்மை பெறுகின்றது. இது பல பிரிவுகளாக வகுக்கப்பட்டும் உலகளாவிய ரீதியில் வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுடன் இருப்பினும் விளையாட்டு உருவாக்கத்தையும் அதன் வரலாற்றையும் எடுத்து நோக்கும் போது மனிதன் தோற்றம் பெற்றதிலிருந்தே விளையாட்டும் ஆரம்பித்திருக்கின்றது என்றே கூற முடியும்.

மனிதன் நாகரிகம் அடைந்து வளர்ச்சி அடைவதற்கு முன் காடுகளில் வாழ்வை நடத்தியவர்களுடன் இருந்தே விளையாட்டுக்கு அத்திவாரம் இடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் காடுகளுக்குள்ளே மிருகங்களுக்குள் ஒருவராக வாழ்ந்த மனிதன் வேட்டையாடும் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்ட போதும் ஏனைய



மிருகங்களிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவையும் அன்றைய மனிதனுக்கு இருந்தது. இதற்காக நீண்ட தூரம் ஓட வேண்டியதும், உயரமான பற்றைகள், ஆறுகள், மலைகள், வாய்க்கால்கள் என்பவற்றை ஓடியும், கடந்தும், பாய்ந்தும் தன்னைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. இத்துடன் மிருகங்களை வேட்டையாடுவதற்கு, அன்றைய நாகரிகம் வளர்ச்சி பெறாத நிலையில் கூரியதடிகள், கற்கள் என்பவற்றை பயன்படுத்தியே மிருகங்களை வேட்டையாடித் தன் வாழ்வை நகர்த்தி வந்தான்.

அதன் பின் மனிதன் சற்று நாகரிகம் அடைய முற்படுகின்றான். மிருகங்களை இனம் கண்டு தன்னுடன் சேர்ந்து வாழக்கூடிய விலங்குகளுடனும் நாகரிக வாழ்க்கையில் வனங்களை விட்டு கிராமங்களை உருவாக்கி விவசாயத்தை பூர்வீகத் தொழிலாகக் கொண்டான். அக்காலத்தில் தான் முன்னோர்கள் காடுகளில் வாழ்வை நடத்தியபோது தன்னுடைய வாழ்வுக்காக காடுகளில் தான் பயன்படுத்திய நுட்பங்களை கிராமங்களில் ஒய்வான நேரங்களில் பொழுதுபோக்கு நிகழ்வாக விளையாட்டை நடைமுறைப்படுத்தினார்கள். அன்று நீண்ட தூரம் மிருகங்கள் விரட்டிய போது அதிலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக ஓடிய தூரங்களை இன்று நீண்ட தூர ஓட்டங்களாகவும். குறுந்தூர ஓட்டங்களாகவும் வரையறுத்தான். மிருகங்களை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களை ஈட்டி எறிதல், குண்டு எறிதல், தட்டு எறிதல் என எறிதல் நிகழ்வாக மாற்றம் அடைந்தன. இத்துடன் மலைகள், ஆறுகள் என்பவற்றைக் கடந்து பாய்ந்து போனதை நீளம், உயரம் தடி ஊன்றிப் பாய்தல் என பாய்தல் நிகழ்வாக்கினான். அவ்வாறே மரதன் ஓட்டம் எனும்போது அதை சற்று வித்தியாசமாகப் பார்க்க வேண்டும். ஆரம்ப காலத்தில் எதென்ஸ் நகரத்திற்கும் பாரிஸ் நகரத்திற்குமான யுத்தத்தில் பாரிஸ் மன்னனை ஏதென்ஸ் நகர மன்னனும் படைகளும் வெற்றி கொண்டனர். இச்செய்தியை எதென்ஸ் நகர மக்களுக்கு தானே சென்று தன் நாட்டு மக்களுக்கு முதலில் சொல்ல வேண்டும் என்பதற்காக போர் நடந்த இடத்தில் இருந்து தன்நாட்டு மக்களுக்கு ஓடிச் சென்று நாம் வெற்றி அடைந்து விட்டோம் என்ற செய்தியைச் சொல்லி அவ்விடத்திலேயே வீழ்ந்து மரணமடைந்தான். அவன் ஓடிய தூரம் 42.9 கிலோ மீற்றர். இதுவே இன்றைய உலகின் மரதன் ஓட்டமாக மாற்றம் அடைந்துள்ளது.



இப்படியே தான் விளையாட்டின் ஆரம்ப கட்டம் நாகரிகம் அடைந்த மனிதர்களிடையே வளர்ச்சி பெற்றது. கிராம ரீதியில் ஓய்வு காலங்களில் கிராம ரீதியாக சில போட்டிகளை நடத்தினார்கள். அக்காலத்தில் எழுதப்பட்ட விதியோ அல்லது அதில் வளர்ச்சி கண்டவர்களோ இல்லாத காலமாக இருந்தபோதும் விளையாட்டு கிராம ரீதியில் பல முரண்பாடுகளையும் கிராம வேறுபாடுகளையும் பகை உணர்வையும் ஏற்படுத்திய போது சில கிராம முதல்வர்களால் சில சட்ட திட்டங்களை அமுல் படுத்தவே முதல் விளையாட்டுக்களுக்கு விதி அமைக்கப்பட்டுள்ளதும் விளையாட்டின் பரஸ்பரம் பேணப் பட்டதற்கு அன்றைய மனிதன் அடித்தளம் இட்டான்.

# இன்றைய வளர்ச்சியும்



எனவே அன்றைய மனிதனின் பூர்வீக தொழிலாக இருந்த விவசாயத்தில் வேகமான செயற்பாடுகளுடன் நாகரிக வளர்ச்சியில் உள்நுழைய ஆரம்பித்ததன் விளைவாகவே விஞ்ஞானமும் வளர்ச்சி அடைந்து பல துறைகளையும் மனிதன் கட்டியெழுப்பினான். எனவே உலகின் எல்லாத் துறையின் வளர்ச்சிக்கும் மனித உடல் வளர்ச்சி இன்றியமையாததாக இருக்க வேண்டும் என்பதற்காக உடல் வலுவையும் ஆரோக்கியமான மக்கள் கூட்டத்தையும் விளையாட்டின் ஊடாகவே கட்டியெழுப்ப லாமென அன்றைய மனிதன் நம்பிக்கை பூண்டான். அதன் அடிப்படையில் கிராம, பிரதேச, மாவட்ட, தேசிய, சர்வதேச விளையாட்டுக்களாக இன்றைய உலக நடப்பில் இராணுவ, அரசியல் ஏனைய அனைத்தையும் தாண்டி உலகில் விளையாட்டுக்கள் முன்னணியில் நிற்கிறது.

இதற்கு அண்மையில் நடந்துள்ள 08ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஒரு சுற்றில் இந்திய அணியினரும் பாகிஸ்தான் அணியினரும் விளையாடிய போதும் ஒப்பீட்டு ரீதியில் ஒரு நாட்டினுடைய போர்க்களம் ஒன்றாகவே அமைந்திருந்தது. இரு நாட்டுத் தலைவர்களும் தங்கள் அணிகளின் வெற்றிக்காக தொலைக்காட்சிக்கு முன்பாகவே இருந்தார்களாம். இறுதியில் இந்திய அணி வெற்றி பெற்ற போது இந்தியாவின் தன்மானம், இறைமை என்பவற்றை இந்திய அணி காப்பாற்றி விட்ட பெருமையில் இந்திய நாட்டு பிரதம மந்திரி வாஜ்பாய் அவர்கள் இந்திய அணிக்கும் அணியின் இன்றைய உலகப் புகழ் பெற்று வரும் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கருக்கு முதல் வாழ்த்துச் செய்தியினையும் பல வரவேற்புக்களையும் வழங்கியிருந்தார். எனவே இவற்றை நோக்குமிடத்து ஒரு தாய் நாட்டின் இறைமையைக் காத்து நிற்கும் ஒரு பெரும் துறையாகவே இன்றைய விளையாட்டுத்துறை உலக சமூகத்தினரால் கட்டியெழுப்பப் பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

**அ.நவா**




- ஜெயந்திரன்

---

# விஸ்டன் சஞ்சிகை புகழாரம்

கிரிக்கெட் போட்டிகளில் தடுமாறி வந்த இந்திய அணியை வெற்றிகளை குவிக்கும் அணியாக மாற்றியவர் கப்டன் கங்குலிதான் என விஸ்டன் சஞ்சிகை புகழாரம் சூட்டியுள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் இருந்து வெளியாகும் கிரிக்கெட் குறித்த விஸ்டன் சஞ்சிகை இந்த விளையாட்டின் பைபிள் என அழைக்கப்படுகின்றது.

மிகச் சிறந்த வீரர்களைப் பாராட்டி எழுதிவரும் விஸ்டன் சஞ்சிகை கடந்த இதழில் சச்சின் டெண்டுல்கரின் சாதனைக்கு புகழாரம் சூட்டியதுடன் கிரிக்கெட்டின் தந்தை என வர்ணிக்கப்படும் அவுஸ்திரேலியாவின் காலஞ்சென்ற டொன் பிரட்மனின் பத்து வருட சாதனையை ஒரு வருடத்தில் டெண்டுல்கர் விஞ்சிவிட்டார் எனவும் தெரிவித்திருந்தது.



இதைத் தொடர்ந்து இந்திய அணியைக் உறுதியான அணியாக குறிப்பிட்டுள்ள விஸ்டன் இதற்கு காரணமான கங்குலியையும் பாராட்டியுள்ளது.

மிகவும் மந்தமான நிலையில் இருந்த இந்திய கிரிக்கெட்டையே தமது மிகச் சிறந்த ஆற்றல் மூலம் தூக்கி நிறுத்திய பெருமை கங்குலியையே சாரும் என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்த இந்திய வீரர்களை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் மார்பு தட்டிக்கொள்ளும் வீரர்களாக மாற்றிய பெருமைக்கு கங்குலியே காரணம் என விஸ்டன் பத்திரிகை வர்ணித்துள்ளது.

உலகக் கோப்பை இறுதி ஆட்டத்தில் இந்திய அணியின் தோல்வி குறித்து குறிப்பிட்டுள்ள இப்பத்திரிகை பதற்றம் காரணமாகவோ நம்பிக்கை இன்மை காரணமாகவோ இத்தோல்வி ஏற்படவில்லை என்றும் அயல் நாட்டு மைதானங்களில் வீரர்களுக்கு உள்ள திறமை குறைவே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# கிரிக்கெட் பந்து பறக்கும் வேகம்

உலகில் மிக வேகமாகப் பரவிய விளையாட்டு என்றால் அது கிரிக்கெட்டாகத்தான் இருக்கும். எது எதையோ ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டுபிடித்து பிரமிக்கும் விஞ்ஞானிகள் இந்தக் கிரிக்கெட் ஆட்டத்தையும் விட்டுவைக்கவில்லை.

லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கிரிக்கெட்டைப் பற்றி முழுமையாக ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளனர். அவர்களின் கண்டுபிடிப்புக்கள் பல வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பல விதங்களிலும் மிகவும் உபயோகமாக அமைந்துள்ளது.

கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் முக்கிய இடம் வகிப்பது பந்து. இந்தப்பந்து பறக்கும் வேகம் என்ன தெரியுமா? வேகமாக வீசப்படும் பந்தின் வேகம் மணிக்கு 75 மைல்கள். அப்படிப்போல் பந்து பாய்ந்து செல்லும் போது அதன் வேகம் வினாடிக்கு 30 மீற்றர்கள்.

அப்போது அது வினாடிக்கு 11முறை பின்புறமாக சீராக சுழல வேண்டும். அதன் தையல் பந்து செல்லும் திசைக்கு 20 டிகிரி கோணத்தில் சாய்ந்திருக்க வேண்டும். வேகப்பந்து வீச்சுக்கு விஞ்ஞானிகள் பல ஆராய்ச்சிகளுக்குப் பின் வகுத்துள்ள முறைகள் தான் இவை.



அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் பிரட் லீ

# வரட்சியான காலநிலையால் கோழிகளுக்கு தொற்றுநோய் பரவும் அபாயம்!

தற்போது வரட்சியான காலநிலை நிலவுவதால் கோழிகளுக்கு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வைகாசி மாத முடிவில் இந்நோய் பரவும் அபாயம் மிகவும் அதிகமாக இருக்கும் எனவும் அவதானிக்கப்பட்டுள்ளது.கூடுதலாக வைரஸ் நோயான றணிக்கற் நோயே வேகமாகப் பரவுவதாக அறியப்பட்டுள்ளது.

இதற்குத் தடுப்பாக அருகிலுள்ள கால்நடை வைத்தியரை அணுகி தடுப்புச் செய்ய வேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

தடுப்பு முறைகளாக கோழிக் குஞ்சுகள் 7 நாள் வயதுடையனவாக இருக்கும் போது வாய்மூலம் தடுப்பு மருந்தைக் கொடுக்கவேண்டும். 21 நாள் வயதுடையதாக இருக்கும் போதும் 2ஆம், 3ஆம் மாதத்திலும் வாய் மூலமான தடுப்பு மருந்தைக் கொடுக்க வேண்டும். திரும்பவும் மூன்று மாதத்திற்கொருமுறை றணிக்கற் தடுப்பு மருந்து கொடுத்தல் வேண்டும்.

நோய் அறிகுறிகளாக எல்லா வயதுக் கோழிகளிலும் வெள்ளை பச்சை கலந்த கழிச்சல் காணப்படும். இந்நோய் தொற்றினால் கோழிகளின் இறப்புவீதமானது 90-100 ஆக இருக்கும். தொற்றியபின்னர் சிகிச்சை அளிப்பதால் பயனில்லை. றணிக்கற்றை விட கம்போரா, மரெக்ஸ் கோழியம்மை போன்ற நோய்களும் கோழிகளைத் தாக்கும் உயிர் கொல்லி நோய்களாகும் என மேலும் அச்செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

# கனோஜி முன்பள்ளிக்கூடம் புளியம் பொக்கணையில் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி வடக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட புளியம் பொக்கணை கனோஜி முன்பள்ளி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. புளியம் பொக்கணை உப தபால் அதிபர் வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

மங்கல விளக்கினை மாவீரர் கனோஜியின் சகோதரனும் பகுதி கிராம சேவையாளரும் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. செழியன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நிறுவனக்கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன. முன்பள்ளி மண்டபத்தினை நாகேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி. வைரமுத்து நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பிரதம குரு சிவசிறி அ.சிவலோகநாதக்குருக்கள் ஆசியுரை வழங்கி, முன்பள்ளி ஆசிரியரின் திறமையைப் பாராட்டி புதிய துவிச்சக்கர வண்டி ஒன்றினை அன்பளிப்பாக வழங்கினார்.

தொடர்ந்து சிறப்புரைகளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. செழியன் கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஜெராட், அதிபர் திருமதி வைரமுத்து ஆகியோர் ஆற்றினார்கள். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (சோ)

# அம்பன் கமநல சேவைத் திணைக்களம் இயங்காமையால் மக்கள் பெரும் விசனம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு அம்பனில் இயங்கி வந்த கமநல சேவைத் திணைக்களம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வடமராட்சி கிழக்கில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அரச அலுவலகங்கள் ஓரளவேனும் இங்கு இயங்கி வருகின்றமை தெரிந்ததே.

எனினும் மேற்படித் திணைக்களம் பருத்தித்துறையில் இயங்கி வருகின்றது. மக்கள் இங்கு மீளக் குடியமரத் தொடங்கி ஒரு வருடம் முடிவுற்ற நிலையிலும் அந்த நிலையம் இன்னமும் அப்பகுதிக்கு வரவில்லை. மாமுனை தொடக்கம் கேவில் வரையான மக்கள் பெருமளவில் விவசாயத்தில் ஈடுபடுவதால் அவர்கள் தமது விவசாயப் பொருட்களையோ அதற்கான உர வகைகளையோ பெறுவதாக இருந்தால் 30 கிலோ மீற்றர் சென்று பருத்தித்துறையில் பெறவேண்டிய தேவை இவ்வளவு காலம் இருந்து வருகின்றது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுடன் மக்கள் கதைத்த போதும் அவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (11)

### -பயணிகள் பேருந்தில் -

# கைச்சங்கிலி அபகரித்தவர் காவல்துறையால் கைது!

(அலுவலக செய்தியாளர்)

பயணித்த வாகனத்தில் வைத்து பெண் ஒருவரிடமிருந்து அபகரிக்கப்பட்ட கைச்சங்கிலியினை பளை காவல்துறையினர் மீட்டு உரியவரிடம் கையளித்தனர்.

மேற்படி சம்பவம் கடந்த 28ஆம் திகதியன்று நண்பகல் பளைப் பகுதியில் வாகனத்தில் பயணிக்கும் போது இடம் பெற்றுள்ளது.

தகவலினையடுத்து துரித நடவடிக்கையில் இறங்கிய பளை காவல் துறையினர் சந்தேக நபரை விசாரணைக்குட்படுத்தியதுடன் கைச்சங்கிலியினை உரியவரிடம் கையளித்தனர்.

காவல் துறையினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் காரணமாக கைச்சங்கிலி உடன் கைப்பற்றப்பட்டதனை அங்கு குழுமிநின்ற மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி. கால்நடை வளர்ப்போர் கூ.ச. செயற்பாடுகள் ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக்கூட்டம் நேற்றுக் காலை 11.00 மணிக்கு கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படிக் கூட்டத்தில் கடந்த வருடச் செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதுடன் அதன் குறைபாடுகள் அதனை இனிவரும் காலங்களில் எவ்வாறு சீர் செய்து புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கிளி. மாவட்டத்தில் உள்ள பாலைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தல், கூட்டுறவுச் சபைக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளும் தீர்மானமும் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு போன்ற தொழில்களை ஊக்குவிப்பது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொதுச்சபை கூட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சுமதன்ராஜ். கால்நடை வைத்தியர் ரேணுகா கௌரிதரன், கிளி.மாவட்ட பொருண்மிய மே.நி.பொறுப்பாளர் ம.சவுந்தரராயன், கூட்டுறவு திணைக்கள பிரதம கணக்குப் பரிசோதகர் க.பத்மநாதன், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் வீ.குணசிங்கம், கூட்டுறவு அலுவலர் நவநீதன் ஆகியோரும் பொதுச்சபையின் 16 உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (லோ)

# போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கு மாவட்டங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம், கபடி போட்டி எதிர்வரும் 10,11,12 ஆம் திகதிகளில் கிளி. மத்திய பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடகிழக்கின் 8 மாவட்டங் களைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொள்ள உள்ளனரென கிளி.மாவட்ட விளையாட்டு அதிகாரி சுகலகராசா தெரிவித்துள்ளார். (சோ)

# திலீபன் மருத்துவமனையில் 1805 பேர் ஏப்ரலில் சிகிச்சை

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினர் சித்திரை மாதம் சிகிச்சை அளிக்கப்பட்ட நோய்களும் நோயாளிகளின் எண்ணிக்கையும் வருமாறு.

வைரஸ் காய்ச்சல் 240, மலேரியா 82, சுவாசத் தொற்று நோய்205, வயிற்றோட்டம்51, ஏனைய தொற்று நோய்கள் 113, தொய்வு நோய் 96, குருதிச்சோகை 98 பாம்புக்கடி 04 ஏனையவை 916 இம்மாத வெளிநோயாளர் பிரிவில் 1805 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.அத்துடன் வாரத்தில் ஒரு நாள் திலீபன் மருத்துவமனையினர் மாமுனையில் நடமாடும் மருத்துவசேவையினையும் செய்து வருகின்றனர். சித்திரை மாதம் மாமுனையில் 462 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கேவில் பிரதேசத்தில் அவசரகால முதலுதவி நிலையம் ஒன்றை அமைத்து வாரத்தில் ஒருநாள் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.மற்றும் வடமராட்சி கிழக்கில் உள்ள 10 பாடசாலைகளுக்கும் சென்று மாணவர்களைப் பரிசோதித்து சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்துக்களையும் திலீபன் மருத்துவமனையினர் மேற்கொண்டுவருகின்றனர். (11)

# முல்லை நகரிற்கு விரைவில் மின்சாரம்; மின்பிறப்பாக்கி பெற நிதி ஒதுக்கீடு

## - உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப் பகுதி மக்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா தெரிவித்தார்.

நகரிற்கான மின் விநியோகத்திற்கென 160 கிலோ வோல்ட் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ய உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு 19 இலட்சத்து 99 ஆயிரத்து 500 ரூபாய் பணம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெகுவிரைவில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார் (20)

# கிளி.யில் தரமான அரிசி பெறுவதில் சிரமம்!

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் காலபோக நெற்செய்கையில் பாரிய விளைச்சலினைப் பெற்றிருந்தும் இங்கு சில விற்பனை நிலையங் களில் தரமான அரிசியினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென பாவனையாளர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

கிளி. மாவட்டத்தில் சில வியாபார நிலையங்களில் தூர்மணம் வீசும் அரிசி விற்பனை செய்யப்பெற்று வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு தரமான அரிசியினைப் பெறுவதற்கு வழிசமைக்கப்படவேண்டுமென மக்கள் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகத்திடம் வேண்டியுள்ளனர்.

இது குறித்து அரச அதிபருடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்;

இது உண்மையிலே ஒரு பாரிய குறைபாடெனவும், நெல்குற்றும் ஆலைகளில் 24 மணித்தியாலங் களுக்கு ஊறவிட வேண்டிய நெல்லினை 48 மணிநேரம் ஊறவைப்பதினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதெனவும், இதனைக் கருத்திற் கொண்டு அரிசி ஆலையினர் உரிய முறையில் செயற்பட்டு, முறையான தொழில் நுட்பத்தைப் பிரயோகித்து அரிசியினைப் பதப்படுத்தி தரமான அரிசியினை வழங்க முன்வரவேண்டும் என்று வேண்டியுள்ளார். (சோ)

# பொலிஸாருக்கு அதிக அரசியல் செல்வாக்கு; தடுக்காவிடில் சனாதிபதி நடவடிக்கை!

## - பிரதமருக்கு ஊடக செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

பொலிசாருக்கு வழங்கப்படும் தேவையற்ற அரசியல் செல்வாக்கை நிறுத்தாவிட்டால் இதனை மேலும் வளரவிடாது தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரும் மக்களின் ஆணையை கவனத்தில் எடுக்க நேரிடும் என்று பிரதமருக்கு சனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளதாக சனாதிபதி செயலக ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர் பொலிஸாருக்குள்ள அரசியல் செல்வாக்கு மற்றும் பொலிஸ் சேவை பற்றி பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கடந்த ஒரு வருடமாக பொலிஸ் சேவை பொறுப்பு அமைச்சரின் கீழ் பொலிஸ் சேவையில் பல ஊழல்கள், சட்ட விரோதச் செயல்கள் நடைபெற்றமை பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

உதாரணமாக உறுகொடவத்தைச் சம்பவம், மலைநாட்டில் ஏற்பட்ட சம்பவங்களைக் கூறமுடியும் என தெரிவித்துள்ளார். மேலும் வென்னப்புவ பொலிஸ் நிலையத்திற்குள் ஊடுருவிய அரசியல்வாதியொருவர் அங்கு அடாவடித்தனம் புரிந்தது, கசிப்பு உற்பத்தி செய்தவர்களைக் கைது செய்தமைக்காக தண்டிக்கப்பட்டமை எனப்பல குற்றங்களை புரிந்துள்ளமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவையனைத்தும் ஐ.தே.மு.அரசு உறுப்பினர்களே எனவும் கூறப்பட்டுள்ளது.

இவைதொடர்பாக உள்துறை அமைச்சர் எதுவித நடவடிக்கையினையும் எடுக்காதது பற்றியும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக அவ்வறிக்கை கூறுகிறது.

# உயிர், உடமை அழிவதற்கு ஜே. வி. பி. காரணமாகும்!

(கொழும்பு)

இந்நாட்டின் சொத்துக்கள் மனித உயிர்கள் அழிவதற்கு ஜே.வி.பி. கட்சியினரே காரணமாகின்றனர் என திம்புலாகலபிரதேச சபைத் தலைவர் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் பேசும்போது, ஜே.வி.பி., பொ.ஐ.மு.யினர் இணைந்து சமாதானத்தைக் குழப்பி நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர் எனவும் கூறியுள்ளார்.

# செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு வைத்தியசாலைகளில் சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் 8ஆம் திகதி உலக செஞ்சிலுவை தினத்தினை முன்னிட்டு கிளி. மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள வைத்தியசாலைகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிளி. மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் பிரதேச ரீதியாகவுள்ள கிளைச்சங்க ஊழியர்கள், தொண்டர்களினால் அந்தந்தப் பிரதேச வைத்தியசாலைகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதென கிளி.மாவட்ட செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு தெரிவித்துள்ளார். (சோ)

# தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்று திரண்டு திடசங்கற்பம் பூணுவோம்

## - பா.உ.ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

**சிக்காகோ நகரிலே தொழிலாளர்களின் உரிமைக்காக 1886-ம் ஆண்டு எப்படி ஒன்று கூடி துப்பாக்கித் தாக்குதல்களின் மத்தியிலும் ஒன்றுகூடிப் பல தொகையான உயிர்கள் பிரிந்தாலும் தொழிலாளர் புரட்சியை ஏற்படுத்தி உலகத் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்களோ அவ்வாறு இன்றைய எமது ஈழப் போராட்டத்தில் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்று திரண்டு திடசங்கற்பம் பூணுவோம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டம் இலுப்படிச்சேனையில் இடம் பெற்ற மேதினக் கூட்டத்தில் அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் உரை நிகழ்த்துகையில், தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. எங்களுக்குப் பின்னால் பெரும் அணி நிற்கின்றது. "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்கின்ற செய்தியோடு எமது போராளி வர்க்க அணியுடன் எல்லோரும் ஒன்று திரண்டு 117 ஆண்டுகளுக்கு முன்பு எப்படித் தொழிலாளர்கள் தமது உரிமைகளை ஒன்று திரண்டு போராடி வென்றெடுத்தார்களோ அதே போன்று எல்லோரும் ஒன்று திரண்டு எமது உரிமைகளையும் வென்றெடுப்போம். எனத் தெரிவித்தார்.

மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உரையாற்றுகையில், 1806 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிரிட்டன் கேலியா என்னும் இடத்தில் முதன் முதலாகத் தொழிலாளர்கள் தமது நேரக் கட்டுப்பாட்டை முன்வைத்துப் போராடி 1820 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இங்கிலாந்திலே தொழிலாளர் உரிமை கோரப்பட்டுப் போராட்டம் நடந்தது. அதன் பின்பு சிக்கா கோவில் நடைபெற்றது.

இதனடிப்படையில் தொழிலாளர் தமது உரிமைக்காக ஒரு நாள் இரு நாள் போராடவில்லை ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் போராடினார்கள். அதை இன்று உலகமே அங்கீகரித்து இன்று நாமும் கொண்டாடுகிறோம்.

அதே போன்றுதான் எமது ஈழப் போரும் இன்று நேற்று ஆரம்பமானதல்ல, பல தசாப்தங்கள் கடந்து விட்டன. எமக்கும் விடிவு கிடைக்கும் அதற்கான வெற்றிப் பாதையை நோக்கிச் சென்று சர்வதேச மட்டத்தில் நிற்கிறோம். எமது விடிவும் விரைவில் என்பதை மனதில் நிலை நிறுத்திக் கொண்டு செயற்படுவோம் என்றார்.

# சனாதிபதிக்கு புதிய செயலாளர்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதியின் புதிய செயலாளராக ஜி.என். கருணாரட்ண நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதியின் செயலாளராக இருந்த குசும்சிறி பாலபட்டபெந்தி கடந்த வியாழனன்று ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஜி.என். கருணாரட்ண புதிய செயலாளராக நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

# நடவடிக்கை எடுப்பார்களா?

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இப்போது கடும் வரட்சி காரணமாக கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த நோய்களுக்குச் சிகிச்சை யளிப்பதற்கு இப்பிரதேசத்தில் ஒரு கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை இல்லை.

இதனால் இங்குள்ள மக்கள் பெரும் கஷ்டத்தினை மேற்கொண்டு வருவதோடு பல கிலோ மீற்றர் தூரம் கிளிநொச்சி, பருத்தித்துறை பகுதிக்கு செல்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இது சம்பந்தமாக சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கையினை எடுப்பார்களா என இங்குள்ள மக்கள் எதிர்பார்க்கின்றனர். (11)

## அம்பாந்தோட்டை - மொனறாகல

# மாவட்டங்களுக்கு இடையில் சர்வதேச விமான நிலையம்

(கொழும்பு)

இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தை அம்பாந்தோட்டை மொனறாகல மாவட்டங்களுக்கிடையிலுள்ள பகுதியில் அமைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உத்தேச விமான நிலையத்தை அமைப்பதற்கான ஆய்வறிக்கையை வரும் மூன்று மாதகாலத்திற்குள் பெற்றுவருவதென்று நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த விமான நிலையத்தை அமைப்பதற்கான உயர் மட்டக் கூட்டமொன்று தெற்கு அபிவிருத்தி அமைச்சர் தலைமையில் அம்பாந்தோட்டையில் நடைபெற்றது.

# தனிமைப் படுத்தப்படும் நோய்களின் பட்டியலில் சார்ஸ் இடம்பெறும்

## - சிறிலங்காவில் சட்டமூலம் தயாராகிறது

(கொழும்பு)

தனிமைப்படுத்தப்படும் நோய்களின் பட்டியலில் சார்ஸையும் சேர்த்துக்கொள்ளும் சட்டமூலத்தை தயாரிக்க சிறிலங்கா சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று முன் தினம் சுகாதார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதுபற்றி அறிவிககப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் விமான பயணிகளிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இரு விசேட படிவங்களை அவர்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொள்கைப் பிரகடனம் விரைவில் பரிசீலனையாம்

## - சனாதிபதி ஊடக செயலகம்

(கொழும்பு)

ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. கட்சியினரின் கூட்டணி தொடர்பாக 5 நாள் பேச்சுக்கள் சில தினங்களில் நடைபெறும் என சனாதிபதி ஊடக செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 30ஆம் திகதி இரு பகுதிக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இம்மாதம் இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்தில் மேற்படி 5 நாட்கள் பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டது. இதன்போது ஜே.வி.பி., சு.க.யினரின் கொள்கைப்பிரகடனம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக அறியவருகிறது.

இது தொடர்பாக் சு.க.வின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கருத்துக் கூறும்போது ஐ.தே.மு. அரசை துரத்திவிட்டு நாட்டுக்குப் பொருத்தமான அரசு ஒன்றை எவ்வாறு அமைப்பது என்பது பற்றி பேசப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

# நாம் கடற்புலிகளை அங்கீகரிக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்

## - பொ.ஐ.மு. பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு கடற்புலிகளின் படையணியை அங்கீகரிக்க நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என்று பிரதான எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடற்புலிகளை அங்கீகரிக்க வேண்டும் என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அண்மையில் சிபாரிசு செய்திருந்தது. எனினும் இதனை பொ.ஐ.மு. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்றும் அப்போது அவர் கூறினார்.

# நிவாரண அரிசியின் விலையேற்றத்தால் விசனம்

## -விளக்குகிறார் பொதுமுகாமையாளர்

(முல்லைத்தீவு)

இடம்பெயர்ந்த மக்களிற்கு வழங்கப்படுகின்ற நிவாரணத்தில் அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது குறித்து மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

1 கிலோ அரிசி 29 ரூபாவாக நிவாரணத்திற்கு வழங்கப்படுகின்றது. முல்லை அரசாங்க அதிபரின் வேண்டுகையின் அடிப்படையில் 1 மூடை நெல்லை 900 ரூபாவிற்கு விவசாயிகளின் நன்மை கருதி கொள்வனவு செய்து சகல செலவுகளும் பார்க்கப்பட்டே இவ்விலைக்குத் தாம் வழங்குவதாக முல்லை கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் கூறியுள்ளார்.

வெளி இடங்களில் அரிசியின் விலை குறைவாக விற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

# தனியரசை வழங்கும் நடவடிக்கைகள் எம் செயற்பாடால் தாமதமடைகிறது!

## முற்றாகத் தடுத்து நிறுத்த ஜே.வி.பி. அழைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் முன் மண்டியிட்டுள்ள ஐ.தே.மு.அரசு வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கிவிட நடவடிக்கை எடுக்கும் விதம் எதிர்காலத்தில் அவர்களின் கடற்புலிகளை அங்கீகரிக்கப்பட்ட கடற்படையாக ஏற்றுக் கொள்ள முனைவதாகத் தெரிகிறது என்று ஜே.வி.பி.செயலர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார். உயர் பாதுகாப்பு வலய விவகாரம் மற்றும் தற்போதைய அரசியல் நிலை பற்றி, பத்திரிகையாளர்கள் வினவியபோது மேற்படி இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை இராணுவத்திற்கு தகவல் கொடுத்து வந்த 13 பேரை புலிகள் கொன்றுவிட்டனர். அரசும் சேர்ந்தே இந் நாடகத்தை நடத்துகிறது. இதனால் எதிர்காலத்தில் ஒருவரும் இராணுவத்திற்குத் தகவல் தர முன்வரமாட்டார்கள்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து படை விலகினால் அது அவர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும். யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அவ்வளவு போரின் நிலையும் அதோகதிதான்.

இன்று பல ஊடகங்கள் ஜே.வி.பியே சமாதானத்தைக் குழப்புவதாகக் கூறுகின்றன. ஆனால் தெற்கிலும் வடக்கிலும் நடப்பது என்ன? ஐதே.க. அரசியல்வாதிகள் தெற்கில் பொலிசாரைத் தாக்கி சமாதானத்தைக் குழப்புகிறார்கள். வடக்கில் மூதூர், தோப்பூர் போன்ற பகுதிகளில் புலிகள் முஸ்லிம்களைத் தாக்கிச் சமாதானத்தைக் குழப்புகின்றனர்.

இடது சாரித் தலைவர்கள் பாதுகாப்பு வலயம் பற்றியோ, வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள,முஸ்லிம் மக்கள் பற்றியோ பேசுவதில்லை. புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் எனக் கேட்பதுமில்லை. இடம் பெயர்ந்தவர்கள் பற்றிப் பேச அவர்களுக்கு திராணியில்லை. ஜே.வி.பி ஒரு போதும் இனவாதிகள் அல்லர். கடற்புலிகள் விவகாரத்தில் சனாதிபதி சரியான முடிவெடுப்பார் என நான் நம்புகிறேன்.

ஜே.வி.பி-பொ.ஐ.மு. கூட்டு முறிவடையும் என ஊடகங்கள் கூறுகின்றன. சிலரின் எதிர்பார்ப்பும் அதுவே எனினும் அப்படி எதுவும் நடக்காது.

அரசு பிரபாவுக்கு தனியரசு ஒன்றை வழங்க எடுக்கும் நடவடிக்கை எமது ஆர்ப்பாட்டத்தினால் தாமதமாகிறது. இது முழுமையாக நிறுத்தப்பட வேண்டுமாயின் தேசப்பற்றுள்ள மக்கள் கட்சி ஒன்றை கட்டியெழுப்ப வேண்டும். இவ்வாறு டில்வின் சில்வா கூறியிருக்கிறார்.


# அறிவித்தல்

பிரதேச செயலர்,
கரைச்சி, கிளிநொச்சி,
2003-04-17.

பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி என்னும் விலாசத்தில் வசிக்கும் திரு.கந்தசாமி முருகையா என்பவர் தனது உரித்தான பின்வரும் ஆதனடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணியைத் தனது உறவினரான யோசப் நாயகம் வின்ஸ்ரன் யேசுதாசன் என்பவர்களுக்கு மாற்றிக் கொடுக்குமாறு விண்ணப்பித்துள்ளார்.இம்மாற்றம் சம்பந்தமாக ஏதாவது ஆட்சேபனைகள் இருந்தால் இன்றிலிருந்து 14 நாட்களுக்கு எழுத்து மூலமாக ஆட்சேபனையைத் தெரிவித்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதனடாப்பு:- வடமாகாணம் கிளிநொச்சி மாவட்டம், கிளிநகர கிராமசேவையாளர் பிரிவில் உள்ள ரி.எஸ்.பி.பி.3.4 இலக்க வரைபடத்திலுள்ள 117ஆம் இலக்கக் காணி, இதன் ஏக்கர் 1ஏக்கர், 6றூட் 36 பேர்ச்சேஸ்

வடக்கு:- பிரதான வாய்க்கால்
கிழக்கு:- துரைராச இரத்தினம் ஆகியோரின் காணி
தெற்கு:- ஐயாத்துரை இராசாத்தி
மேற்கு:- வீதி

**பொன்.நித்தியானந்தன்,**
**உதவி அரச அதிபர் பி.செ.**
**கரைச்சி, கிளிநொச்சி.**

(3184)



## சிந்தனைக்கு

வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால்தான் நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக்கொண்டோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-05-2003

## சமாதானமும் சகவாழ்வும்

சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் அடிக்கடி தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்குப் பாதகமான கருத்துக்களையும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான அறிவிப்புக்களையும் விடுப்பதுண்டு. ஒரு புறம் விடுதலைப் புலிகளின் ஆயுத ரீதியான போராட்டத்தை 'பயங்கரவாதம' எனக் கூறவிழைவதும், ஆயுத ரீதியிலான போராட்டத்தில் விடுதலைப் புலிகள் வெற்றிபெறப் போவதில்லை என எச்சரிப்பதும் உண்டு.

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்காக நடத்தும் ஆயுதப் போராட்டம் வெற்றி பெறுகின்றதோ இல்லையோ இன்றைய அரசியற் சூழ்நிலையில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும்,இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை விடுதலைப்புலிகளுடனேயே காணவேண்டும் என்பதையும் அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸினாலோ அன்றி வேறு யாராலுமோ நிராகரிக்க முடியாது.

இது ஒருபுறம் இருக்க -அஸ்லி வில்ஸ் குறிப்பிடுவது போன்று சமாதான வழிமுறை இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை எட்டுவதற்கு வரவேற்கத்தக்க வழிமுறை என்பதும் மறுக்க முடியாததொன்று தான். அதாவது வீணாக இரத்தம் சிந்தாமல், பெரும் சொத்து அழிவு உண்டு பண்ணாமல் பேச்சுக்கள் மூலம் தீர்வொன்றைக் காண்பதென்பது வரவேற்கத்தக்கதொன்றே.

ஆனால், அதைவிட இலங்கையில் தமிழ் மக்கள் சமஅந்தஸ்துடனும், கௌரவத்துடனும்,சமஉரிமைகளுடனும் வாழ்வதென்பது முக்கியமானதொன்றாகும். அவ்வாறு இல்லாது தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக அரசியல் உரிமைகள் ஏதுமற்ற அநாதைகளாக வாழ்வதென்பது எத்தனை தூரம் சாத்தியப்பாடானதொன்று.

தமிழ் மக்கள் அமைதியான குணாம்சமும்,விடாமுயற்சியும், கடுமையான உழைப்பையும் கொண்டவர்கள் என்பதை அவர்களின் கடந்த கால வரலாறே வெளிப்படுத்தப் போதுமானதாகும். பிரிட்டிஷ் காலத்து நிர்வாக அறிக்கைகள் எதைப் புரட்டினும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் குறித்த முன்பக்க அறிமுகத்தில் வருடம் பூராவும் அமைதி நிலவியது என்ற குறிப்புக்களையே காண முடியும். இது பிரிட்டிஷ் அதிகாரிகளின் கூற்றுக்கள் ஆகும்.

இதேவேளை, தமிழ் மக்கள் இலங்கையின் வறள்வலயப் பகுதியில் வாழ்ந்தாலும் தமது வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்காக கடின உழைப்பையும், விடாமுயற்சியையும் தொடராக மேற்கொண்டு வந்த இனமாகும். இத்தகையதொரு மக்கள் கூட்டம் ஆயுதம் தாங்கிப் போராட முன்வந்தமையும், எத்தகைய இன்னல்களையும் தாங்கி அதனை முன்னெடுப்பதற்குமான காரணம் எவ்வாறு அர்த்தமற்றதொன்றாகவோ, வீம்பிற்கானதாகவோ இருக்க முடியும்?.

தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை ஆயுத ரீதியில் ஆரம்பிக்கவில்லை. தமிழ் மக்களுக்கு ஆயுதங்களும் இலகுவாகக் கிடைக்கப்பெற்றுவிடவுமில்லை. பெரும் பிரயத்தனங்கள், துன்பங்கள்,துயரங்கள் என்பனவற்றையும் தாண்டியே அவை பெறப்பட்டன. தமிழ் மக்களின் இயல்பான கடின உழைப்பு, விடாமுயற்சி என்பனவே அவற்றைப் பெற்றுக்கொடுத்தன.

இதேபோன்று, தமிழ் மக்களின் சேமிக்கும் மனப்பாங்கு, வாய்ப்பு வசதிகளை விரைந்து தேடிச்செல்லும் புத்திக் கூர்மை என்பனவே எத்தனையோ சவால்கள், இடர்கள் என்பவற்றையும் தாண்டி ஆயுதப் போராட்டத்தை மக்கள் தொடரவும், தமிழ் மக்களின் வளர்ச்சியை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தவும் காரணமாகின.

இதேவேளை, ஆயுதப் போராட்டத்திற்கு முன்பாகத் தமிழ் மக்கள் நடத்திய கால் நூற்றாண்டிற்கும் மேற்பட்ட சாத்வீகப் போராட்டம் தோற்றுப் போனது ஏன்? அதற்குக் காரணம் தான் என்ன? அன்றி இதனால் தமிழ் மக்கள் துன்பதுயரங்களை அனுபவிக்கத்தான் இல்லையா? அவ்வாறானால் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போனதேன்? சாத்வீக ரீதியில் போராடிய தமிழ் தலைமைகள் தனிநாடே ஒரே தீர்வாக முடியும் என்ற முடிவிற்கு வந்ததேன்? மறுவளமாக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியும் என்ற முடிவுக்கு வந்தது எதனால்? இவ்வாறான பல கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதிலாக அமையக் கூடியது தமிழ் மக்கள் ஆயுத ரீதியில் பலமற்றிருந்தமையே ஆகும்.

ஆயுத ரீதியிலான போராட்டத்தின் மூலம்தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது எனக் கூறுபவர்களினால்-சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிப்பவர்களினால் இதற்கு ஒரு கடந்தகால எடுத்துக்காட்டைக் கூற முடியுமா? இன்று கூடத் தமிழ் மக்களுக்கு எதிராகத் தற்கொலைப் படைகளைத் தயார் செய்வதைப் பற்றியே சிங்களப் பேரினவாதிகள் பேசுகின்றனர் என்பதே உண்மையாகும். சமாதானமும், சகவாழ்வும் உயர்வானதுதான். அது மற்றவர்களின் உரிமைகளை மதிக்கும் வரையிற்தான்.அவ்வாறு இல்லாத நிலையில் ஆள்பவர்கள் ஆளப்படுபவர்கள் என்ற நிலை உருவாகிவிடும். அவ்வேளையில் சமாதானமும் சகவாழ்வும் என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

# கொடுமையான ஊழல் நடவடிக்கையில் ஐ.தே.மு அரசு ஈடுபடுகின்றது

## ஜே.வி.பியின் அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வரசு பதவியேற்குமுன் இந்நாட்டில் மோசடியற்ற ஊழல்களற்ற அரசுஒன்றை ஏற்படுத்துவதாக உறுதியளித்தது. ஆயினும் இப்போது ஊழல்கள் மிக்க அரசாக செயற்படுகிறது என ஜே.வி.பி வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து ஊழல்கள், மோசடிகள் அற்ற அரசொன்றை அமைப்போம் என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த இவ்வரசு தற்போது பற்பல சட்டவிரோத செயல்களை நிறைவேற்றியுள்ளது.

கடந்த 20ந் திகதி நுவரெலியாவில் நடைபெற்ற மோட்டார் வண்டிப் போட்டி நிகழ்வொன்றின் போது பார்வையாளராகச் சென்ற கொழும்பு மாவட்ட ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொது மக்கள் முன்னிலையில் இரு பொலிசாரை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியுள்ளார். அவர்கள் இப்போது வைத்தியசாலையில் உள்ளனர். ஆயினும் அவ்வரசியல்வாதிக்கு எதிராக எதுவித சட்ட நடவடிக்கையினையும் இவ்வரசு எடுக்கவில்லை.

மேலும் மாத்தறை மாவட்டத்தில் ஒல்லாந்தர் கோட்டைப் பகுதியில் இருந்த 50 வருட புரதான இரு விருட்சங்களையும் சட்ட அனுமதியின்றி விழுத்தியுள்ளது. இது தொடர்பாக முறைப்பாடு செய்த இரு சட்டத்தரணிகளின் வீடுகள் சேதமாக் கப்பட்டுள்ளன.

இந்நாட்டின் அமைச்சர்கள்,எம்.பிக்கள் போன்றோரைத் தவிர அவர்களின் குடும்பத்தினரும் சட்ட ஒழுங்கைப் புறக்கணித்து செயற்படுகின்றனர் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள பொலிஸ் மா அதிபரை பதவி நீக்குக!

## சிஹல உறுமைய வேண்டுகோள்

சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவைப் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் சிஹல உறுமையக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான கொட்டகதெனிய கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு அவர் ஆதரவாகச் செயலாற்றி வருவதாகவும் அவரைத் தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனவும் கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

எனவே ஆனந்தராஜாவை உடனடியாக சிறிலங்கா சனாதிபதி பதவி நீக்கம் செய்யவேண்டும் என கட்சியின் தலைமையகத்தில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

# கடினமான சமாதான முயற்சிகளை அரசு தொடர்ந்து முன்னெடுக்கும்

## -பிரதமர் ரணில் கருத்து

(கொழும்பு)

கடினமான சமாதான முயற்சியை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் எனச் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். உலக இந்துமாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை இனப்பிரச்சினையை மகாபாரதப் போருடன் ஒப்பிட்டுப் பேசிய அவர் இந்துசமயமும், பௌத்த சமயமும் சமத்துவத்தையே வலியுறுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார். வன்முறைகளைக் கைவிடும்படியே இருமதங்களும் கூறுகின்றன. வன்முறைகளை கைவிட்டுச் சமாதானத்தீர்வைக் காணவே அரசாங்கம் பாடுபட்டு வருவதாகவும் அவர் தனது உரையில் கூறியுள்ளார்.

## இன்று நடைபெறலாம்!

நியூசிலாந்து சிறிலங்கா அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமாக இருந்த இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கடும் மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் முற்றாக கைவிடப்பட்டுள்ளது.

இப்போட்டி காலநிலை சீராக அமையும் பட்சத்தில் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# ஊற்றுப் புலத்தில் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கல்!

(அலுவலக செய்தியாளர்)

கெயார் நிறுவன நிதி உதவியுடன் வன்னி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி அகதிகள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் ஊற்றுப்புலம் கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்புக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது

5000 முதல் 15000 ரூபா வரை ஊக்குவிப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 60 பேருக்குரிய விவசாய உள்ளீடுகள் மற்றும் விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய ஊக்குவிப்புச் செயற்பாடுகள் மேற்படி கிராமத்தில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கிராம அபிவிருத்திக்காக இதுவரை இருபது இலட்சம் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது.

மேற்படி நடவடிக்கைகள் ஊற்றுப்புலம் கிராம மக்களின் வாழ்வு நிலையையும், பொருளாதார நிலையையும் உயர்த்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## -3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி-

# அவுஸ்திரேலியா வலுவான நிலையில் ஸ்ரீவ்வோ, பொண்டிங் அபார ஆட்டம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி தற்போது மேற்கிந்தியத் தீவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிவருகின்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா முதல் இனிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 615 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பதிலுக்குத் தனது முதல் இனிங்சுக்காக துடுப்பெடுத்தாடும் மேற்கிந்திய தீவு இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின் போது விக்கெட் இழப்பின்றி 89 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் துடுப்பாடும் வாய்ப்புக் கிட்டாத அணித்தலைவர் ஸ்ரீவ்வோ 115 ஓட்டங்களையும் பொண்டிங் 113 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன் மூலம் அவுஸ்திரேலியாவின் அதிகூடிய டெஸ்ட் சதத்தைப் பெற்றவர் என்ற சாதனையை ஸ்ரீவ்வோ பெற்றுக் கொண்டார். முன்னர் இச் சாதனையை டொன் பிரட்மன் (29சதம்) பெற்றிருந்தார்.

நான்கு போட்டிகள் கொண்ட இத் தொடரில் 2:0 என்ற நிலையில் அவுஸ்திரேலிய அணி முன்னணி வகிக்கின்றது.




# ஊக்க மருந்து பாவித்த வீரர்களின் பதக்கங்கள் பறிமுதல்!

ஹைதராபாத்தில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளின் போது ஊக்கமருந்து பயன்படுத்திய 15 பேரின் பதக்கங்கள் பறிக்கப்படவுள்ளதாக இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் ஹைதராபாத்தில் இடம்பெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 22 பேர் ஊக்கமருந்து உட்கொண்டமை பின்னர் நடைபெற்ற சோதனைகளிலேயே தெரியவந்துள்ளது.

இவர்களில் நீச்சல் வீரர் முரளிதரன் தவிர மற்றவர்களிடம் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் ஊக்க மருந்து ஒழிப்புக் குழு விசாரணையில் 21 பேரும் ஊக்க மருந்து பயன்படுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தேசிய விளையாட்டுகளில் பங்குபற்றிய 15 பேரின் பதக்கங்கள் பறிக்க இந்திய ஒலிம்பிக் சங்கத்திற்குப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளதாக விசாரணைக் குழுத் தலைவர் மன்மதசிங் கூறியுள்ளார்.

# வட - கிழக்கு புனரமைப்புத் திட்டங்களுக்கு விரைவில் நிதி உதவி வழங்கப்படும்

## உலக வங்கி வதிவிடப் பிரதிநிதி பீற்றர் கெரால்ட்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு புனரமைப்புக் கான திட்டங்களுக்கு விரைவில் நிதி உதவி வழங்கப்படும் என உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் கெரால்ட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு- கிழக்கு புனரமைப்பு நிதியத்திற்கு மேலும் பல நாடுகள் உதவி வழங்க தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சமாதான முயற்சிகளின் மூலம் சாதக மானதொரு சூழ்நிலை உருவாக் கப்படும் போதே நிறைந்தளவிலான வெளிநாட்டு உதவியும் முதலீடும் சாத்தியமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

வர்த்தக சமூகத்தினருடன் பேச்சுக்களை நடத்தி வரும் இவர் நாளை சிறிலங்காப் பிரதமரைச் சந்தித்துப் பேச உள்ளார்.

# களுத்துறைச் சிறைக்கு சிங்களக் கைதிகள் தமிழ் அரசியல் கைதிகள் அச்சம்

(கொழும்பு)

சிங்களக் கைதிகளை களுத் துறை சிறைச்சாலைக்கு மாற் றுவதற்கு எடுக்கப்பட்டுவரும் நட வடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு தமிழ் அரசியல் கைதி கள் சிறைச்சாலை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே இடம்பெற்ற அசம்பாவிதங்ளை சுட்டிக்காட்டி உள்ள இந்த அரசியல் கைதிகள், சிங்களக்கைதிகள் வேறு இடங் களுக்கு இடம் மாற்றப்பட்ட பின்பு அசம்பாவிதங்கள் இடம் பெற வில்லை என்பதையும் சுட்டிக் காட்டி உள்ளனர். சிங்களக்கைதிகளை களுத்துறைக்கு மாற்றும் நடவடிக் கையினால் தாம் அச்சமும் அதிர்ச் சியும் அடைந்திருப்பதாகம் தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள் ளனர்.

தம்மை விடுதலைசெய்து அல்லது சொந்த மாவட்டங்களுக்கு மாற்றிய பின்னர் சிங்களக் கைதிகளை இடமாற்ற வேண்டும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் கோரி உள்ளனர்.

## கரடிப்போக்குச் சந்தியில்

# மணல் ஏற்றி வந்த பாரவூர்தி வாய்க்காலில் தடம் புரண்டது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மண் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று



வாய்காலில் தடம்புரண்டுள்ளது.

நேற்று இரவு 8.30 மணியளவில் இம் மண் ஏற்றிச் சென்ற பாரவூர்தியும் வேறு ஒரு பாரவூர்தியும் கிளி. கரடிப்போக்குச் சந்தியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது.

அதன்பின் மண் ஏற்றிச் சென்ற பாரவூர்தி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த போது இப்பாரவூர்தி மேற்படி சந்தியிலுள்ள வாய்காலில் தடம் புரண்டுள்ளது. இதில் பயணம் செய்த எவருக்கும் காயம் ஏதுவும் ஏற்படவில்லை என தெரியவருகிறது. (பா)

## - யாழ். நாரந்தனையில் -

# சன நடமாட்டமற்ற பகுதியில் பெண் ஒருவர் படுகொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நாரந்தனையில் சனநடமாட்டம் அற்ற வீதியில் சமுர்த்திப் பெண் அலுவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் அணிந்திருந்த நகைகளும் களவாடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கரம்பன் மேற்கை சேர்ந்த ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தரான திலகராசா ஜெகத் ஜனனி (வயது-26) என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டவராவார்.

# அகில உலக இந்து மாநாட்டின் மட்டக்களப்பு பிரதேச விழா

இரண்டாவது அகில உலக இந்து மாநாட்டின் மட்டக்களப்பு பிர தேச விழா நாளை மறுதினம் முதல் நடைபெறவுள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு நகரம் விழாக்கோலம் பூண்டு காணப்படுகிறது.

இந்த வைபவம் மாவட்ட அரச அதிபரும் விழாக்குழுத் தலைவருமான மௌனகுருசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினரான பட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சௌசல்யன் கலந்து கொள்கின்றார்.

# மன்னார் ஆயர் தலைமையில் மன்னாரில் சமாதான ஆதரவுப் பேரணி

## புலிகளின் நிலைப்பாடு சரியானதே என மக்கள் தெரிவிப்பு

(மன்னார்)

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து மன்னாரில் நேற்றுப் பேரணி ஒன்று நடத்தப் பட்டுள்ளது.

மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் தலைமையில் இடம் பெற்ற இந்தப் பேரணியில் மன்னார் சமாதனக் குழு மற்றும் வாழ்வோதயம் ஆகிய அமைப்புக்கள் கலந்து கொண்டனர்.

இந்த பேரணியின் முடிவில் மன்னார் உதவி அரசாங்க அதிபரி டம் கோரிக்கை மனு ஒன்றும் கைய ளிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ தேசியத் தலைவர், சிறிலங்கா பிரதமர், சிறிலங்கா சனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பேரணில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையில் சமத்துவம் மற்றும் கௌரவமான வாழ்க்கையை தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தரும் கடப்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உண்டுஎன்று அம்மனுவில் குறிப் பிடப்பட்டுள்ளது.

முன்பு ஏமாற்றப்பட்ட அனுப வங்களின் பின்னணியில் விடு தலைப் புலிகள் அவதானமாக செயற்படுவது ஏற்கக் கூடியது இந்தக் காரணத்துக்காக சமாதான பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தி இருப்பது நியாயமானது.

பேச்சுவார்த்தைகள் தடைகளின் மத்தியில் தொடர்ந்தும் முன்னெடுக கப்பட வேண்டும் சனாதிபதியின் பங்களிப்பு இன்னும் பயனுள்ள வகையில் அமையவேண்டும் என் றும் அம்மனுவில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (பி)

## சுட்டுக்கொலை

(லண்டன்)

கரவெட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தர்மராசா ஜெய ராஜ் நேற்று மாலை சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிலில் வந்த இனம் தெரியாத நபர்களால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

## காத்தன்குடி...

இந்த நாட்டில் சமாதானம் நிலை பெற வேண்டும் என்று பிரார்த்திக்கும் நோக்கோடும், அதை வலியுறுத்தும் நோக்கோடும் எமது சகோதரர்க ளைச் சந்தித்து அதற்கு ஆக்கபூர்வ மான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரும் நோக்குடனே நாங் கள் யாழ்பாணத்துக்குச் சென்று திரும்பும்வழியில் விடுதலைப் புலிக ளையும்சந்தித்து எமது நல்லெண் ணவிஜயத்தின் நோக்கத்தைத் தெரிவித்தோம்.

தொடர்ந்தும் சமாதான முன்னெடுப்புக்கள் தடையின்றி மேற்கொள்ளப்படவேண்டுமெனக் கோரினோம். அதற்கான நடவடிக் கைகளிலே நாம் ஈடபட்டிருக்கி றோம் என்றும் எமது சகல விவ காரங்களும் முஸ்லிம் மக்களை இணைப்பதற்காகவே முன்னெடுத் துச் செல்லப்படுகிறது என்றும் முஸ்லிம் மக்களுக்கு எந்தவ கையிலும் பாதிப்பு ஏற்படக்கூடிய தாக தாங்கள் நடந்துகொள்ளமாட் டார்கள் என்றும் தலைவர் அவர்கள் அதில்உறுதியாக இருக்கிறார் என் றும் புலிகள் தெளிவாகக் கூறினார்.

## புலிகள் விடுத்த...

சமாதான நடவடிக்கைகளின் பல் வேறு பரிமாணங்கள் - உதாரணமாக போர்நிறுத்த உடன்பாடு கடைப் பிடிக்கப்படும் விதம்பற்றியும் வடகி ழக்குப் பகுதிகளில் நடைபெற்று வரும் மனிதாபிமான நடவடிக்கை கள் பற்றியும் உள்நாட்டில் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் பிரச் சினைகள் பற்றியும் பேச இருக் கிறேன். அதேபோல் தலைவர் பிரபாகரன் அவர்களின் கருத்துக் களையும் கவலைகளையும், நான் கவனமாகக் கேட்பேன் என்கிறார்.

சமாதான நடவடிக்கைகளில் புலிகளுக்கு இருக்கக் கூடிய நம்பிக்கைபற்றி சில தரப்பில் சந் தேகம் இருப்பதாகக் கூறிய அகாசி அவர்கள் கடந்த காலங்களில் நடந்த சமாதானப் பேச்சுவார்த் தைகள் நடத்தப்பட்ட சூழலை வைத்துப்பார்க்கும்போது இலங்கை அரசுடன் ஒத்தகருத்தை எட்ட வேண்டும் என்கிற முயற்சிகளில் புலிகள் உண்மையான ஆர்வம் காட்டியதாகவே தான் கருதுவா தகவும் கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த் தைகளை திடீரென இடைநிறுத் தியதன் மூலம் புலிகள் சமாதா னத்தின் தங்களது நம்பிக்கையை உறுதி செய்யத்தவறிவிட்டதாகக் கருகின்றீர்களா என பி.பி.சி நிருபர் அகாசி அவர்களிடம் கேட்டபோது,

நான் அப்படி கருதவில்லை. வாஷிங்டனில் நடைபெற்ற ஆரம்பக் கத்தின் தன்மை பற்றி சில தவ றான புரிதல்கள் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றே கருதுகின்றேன். பொதுமக்களின் அன்றாட வாழ்வில் முன்னேற்றம் ஏற்படாததைபற்றி புலிகளின் ஏமாற்றங்களை என்னால் நன்றாகப்புரிந்து கொள்ள முடிகிறது அதேசமயம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழும் மக் களின் வாழ்க்கைத்தரத்தில் விரை வான முன்னேற்றங்கள் ஏற்படுத் துவது சாத்தியம் தான் என்று புலி களை ஏற்கச் செய்தால் சமாதானப் பேச்சு வார்த்தையில் அவர்கள் மீண்டும்கலந்து கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன் இந்த விடயங்களை பேசித்தீர்க்க முடியும்.

வரும் யூன் மாதம் டோக்கியோவில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் இலங்கைக்கானகொடையளிப்பு நாடுகளின் மாநாடு திட்டமிட்டபடி நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதில் கலந்து கொள்வது புலிகளுக்கு நன்மை பயக்கும் என்பதை நான் புலிகளின் தலைவர்களிடம் வலியுறுத் தவுள்ளேன்.

சமாதான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரின் உண்மையான நலன்கள் காப்பாற்றப்படவேண்டுமானால் இருதரப்பினருமே சமாதானப்பேச்சு வார்த்தையில் மட்டுமல்லாது டோக்கியோ மாநாட்டிலும் கலந்து கொள்வது அவசிய நடவடிக்கை என்றே நான் கருதுகின்றோன்.

டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளும்படி இந்தியாவை நான் அழைத்தேன் இந்த அழைப்பு எம் சார்பில் மட்டுமல்லாது அமெ ரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் சார்பிலும் விடுக்கப் பட்டுள்ளது.

இதில் கலந்து கொள்வது பற்றி இந்தியா தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என அகாஷி மேலும் கூறியுள்ளார்.

## ரணிலைச்...

எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக் கும் இவர் வன்னிக்கும் வரவுள்ளார்.

## அமெ. உதவி...

ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பிற்கு வரவுள்ள இவர் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கா னிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் செல்வார்.

கொழும்பில் தங்கியுள்ள காலத்தில் பிரதமர் ரணில விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் களுடன் பேச்சுவார்த்தை நடத் துவார். சிறிலங்காவிற்கும் அமெரிக் காவிற்குமிடையிலான உறவை விருத்திசெய்யும் முகமாக விசேடகலந்துரையாடல் ஒன்றிலும் அவர் கலந்துகொள்வார்.

திருமதி றொக்காவுடன் பிரதி வெளிநாட்டமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேயும் கொழும்பிற்கு வரவுள்ளார்.

## அன்ரன் பால ...

குறித்தும், தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடவுள்ளார்.

இதன் பின்னரே விடுதலைப் புலிகளின் தரப்பால் பிரதமருக்கு பதில் கடிதம் அனுப்பப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இக்காலப்பகுதியில் வன்னிப் பகுதிவரும் ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி, நோர்வே உயர் மட்ட அதிகாரிகள், கண்காணிப்புக் குழுத்தலைவர் ஆகியோருடன் தமிழீழத் தேசியத் தலைவரும், அன்ரன் பாலசிங்கம் அவர்களும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

## தென்னமர வாடி...

இக்கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி காடுகள் வளர்ந்து பயணம் மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டதுடன் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் வீடுகள் இருந்தமைக்கான தடயங் கள் எதுவும் இல்லாத அளவுக்கு அவை முற்றாக அழிக்கப்பட்டிருப்ப தாகவும் அங்கு சென்று திரும்பிய வர்கள் தெரிவித்துள்ளனர்

## புலிகள்-கண்...

தைச் சேர்ந்த பவானந்தன், ஜோர்ச் ஆகியோரும் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தரப்பில் அதன் தலைவர் மேஜர் ஜெனரல் ரிலெவ்சன் தலைமையிலான குழுவி னரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக உலங்கு வானூர்தி மூலம் நேற்று பி.ப.2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய கண்காணிப்புக்குழுத்தலைவரையும் குழுவினரையும் சமாதானச் செயல கத்தைச் சேர்ந்த பவானந்தன் வர வேற்று புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு அழைத்துச் சென்றார். இச்சந்திப்பு ஆக்க பூர்வமானதாக இடம் பெற்றதாக இலங்கை போர் நிறுத்தக் கண்கா ணிப்புக்குழுத் தலைவர் சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (சோ)

# சாவு அறிவித்தல்

## நாகநாதி தம்பையா

### (க.ம. விதானையார்)

குழுழமுனை முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட நாகநாதி தம்பையா (க.ம.விதானையார்) அவர்கள் காலமானார் அன்னார் சரஸ்வதியின் அன்புக் கண வரும் சிறிபத்மாநாதன் (லண்டன்) சிறிபுஸ்பநாதன் (ஆசிரியர் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்) சிறிகமலநாதன், கமலறஞ்சிதம், புஷ்பறஞ்சிதம் (லண்டன்) ஜெகதீஸ்வரன் (T.R.O) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பவளநாயகி (லண்டன்) சுயாத்தா, சசிதமலர் இரத்தினசபாபதி (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஒட்டுசுட்டான்) சிறிசுந்தரராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனரும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 04-05-2003 ஞாயிறு இன்று காலை அன் னாரது இல்லத்தில் நடைபெற்று தாமரைக்கேணி இந்து மயானத் தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

குடும்பத்தினர்

3208

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.